IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 118 /2014

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணன் | Caste | : - |
| Father's Name | : மார்கபந்து | Calling | : - |
| Village | : முத்தரசிகுப்பம் கிராமம் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 19 day of August, 2019.

Cross Examination

நான் முத்தரசிகுப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் வெல்டிங் வேலை செய்கிறேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் சதாசிவம், நீலமேகம் ஆகியோர்கள் ஆவார்கள். தாவா சொத்து எங்களுடைய மூதாதையர் சொத்து. எங்களுக்குள் 1.1.1994 அன்று ஊர் பெயரியவர்கள் முன்னிலையில் பாகப்பிரிவினை ஏற்பட்டது. எனக்கு திருமணம் ஆன பிறகு பாகப்பிரிவினை ஆனது. அப்பொழுது நான் முத்தரசி குப்பத்தில் இருந்தேன். பாகப்பிரிவினை பிரித்த போது பெங்களூரில் இருந்தேன் என்ற ால் தவறு. திருமணம் ஆன பிறகு பெற்றோருடன் சேர்ந்து வசித்து வந்தேன். 20.03.1951-ல் கூர்சீட்டு மூலமாக பாகம் பிரித்துக்கொண்டோம் என்று கூறியிருப்பது தெலுங்கில் எழுதிக்கொள்ளப்பட்டது. அதை தமிழில் மொழியாக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன். மொழிபெயர்த்தவருடைய பெயர், ஊர் தெரியும் அவர் எம்.ஏ.பி.எல். படித்துள்ளார் தாவாசொத்திற்குரிய ஆவணம் தாவா சொத்து சித்தூர் மாவட்டத்தில் இருந்தது. கூர்சீட்டின்படி மார்கபந்து கவுண்டருக்கு ஏ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

(Sd/-)..R.Rajamaheswar

DISTRICT MUNSIF

KATPADI.